26.02.2024



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.03/2010</u>**

**<u>வா.சா. 1–போஜராஜன், த/பெ. கிருஷ்ணன்</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

02. என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் பெயர் போஜன். போஜனுக்கு மூன்று ஆண் மக்கள், கிருஷ்ணன்–1, ராமசாமி–2, வெள்ளையன்–3 ஆகியோர்கள் ஆவார்கள். மேற்கண்ட மூவரும் தான் என்னுடைய பாட்டனார் போஜனின் சொத்துக்களை பிரித்து பாகபிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்கள். சர்வே எண்.122/4 என்னுடைய பாட்டனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்கண்ட சர்வே எண்ணை தான் என்னுடைய அப்பா மற்றும் சித்தப்பாக்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். வா.சா.ஆ.1 என் தகப்பனார் தாக்கல் செய்த வரைபடம் தான். மேற்கண்ட வரைபடம் வா.சா.ஆ.1ல் வடபுறம் உங்கள் தகப்பனாருக்கும், அதனை அடுத்து தெற்கே சித்தப்பா ராமசாமிக்கும், அதற்கு தெற்கே சித்தப்பா வெள்ளையனுக்கும் பிரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூவருக்கும் தலா 22 செண்ட் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

03. பூர்வீக சொத்துக்களை மேற்கண்டவாறு 22 செண்டாக 1978 ம் ஆண்டு பிரித்து கொண்டார்கள். மேற்கண்ட பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு மேற்கே, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஏரிவாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான். மேற்கண்ட வாய்க்கால் மூலமாக தான் பாகம் பிரித்துக்கொண்ட சொத்துக்களுக்கும், அதற்கு தெற்கே உள்ள சர்வே எண்.122/5 சொத்துக்களுக்கும் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்கண்டவை தான் வரைபடம் வா.சா.ஆ.1 ல் பச்சைவண்ணமிட்டு காண்பித்துள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட வாரியிலிருந்து பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு A A1 A2 என வாய்யக்காலாக பிரித்து தான் பாகம் பிரித்து தண்ணீர் எடுத்து செல்வதற்கு பாகம் ஏற்படுத்திய போதே வாய்க்கால் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் தவறு. வா.சா.ஆ.1 கண்டவாறு வாய்க்கால் அமைத்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்றும் தற்போது நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

04. தென்வடல் ஏரிவாய்க்கால் சுமார் 5 அடி இருக்கும் என்றால் சரியல்ல, சுமார் 2 ½ அடி தான் இருக்கும், அகலம் 3, 4 அடி இருக்குமா என்றால் 2 ½ அடி இருக்கும். நீங்கள் தவறாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வரைபடம் வா.சா.ஆ.1 ல்

26.02.2024



உங்கள் சொத்தின் வடமேற்கு மூலையில் 5 அடி அகல பலகைக்கல் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தென்வடல் ஏரிவாய்க்கால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரே அகலத்தில் தான் செல்கிறது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பிரிந்த சொத்திற்கு என் பாட்டனார், என் தகப்பனார், தற்போது காலம் வரை மேற்கண்ட தென்வடல் ஏரிவாய்க்கால் மூலமாக தான் தண்ணீர் எடுத்து வருகிறோம். என் தகப்பனாருக்கு பிரிந்த சொத்திற்கு வடமேற்கேயுள்ள 5 அடி அகல பலகைக்கல்லில் ஏறி அதன் பின்பு வாரி வாய்க்கால் மூலமாக தான் நீங்களும், அதற்கு தெற்கே உள்ள நிலத்துக்காரர்களும் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான்.

05. ஏரிவாய்க்காலுக்கு மேற்கே வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான். மேற்கண்ட வண்டிப்பாதை எரகுடி மெயின்ரோட்டிலிருந்து வடக்கு நோக்கி ஐய்யாற்று வரை செல்வதற்கு போடப்பட்ட பாதை என்றால் சரிதான். 5 அடி பலகைக்கல்லுக்கு கீழே தண்ணீர் தேவைப்படும் போது பாய்ச்சுவதற்காக மண்ணால் அடைக்கப்பட்டும், தேவைப்படும் போது திறக்கும் விதமாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 வரைபடத்தில் ஏரிவாய்க்காலின் அகலத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் A A1 A2 என

குறிப்பிடப்பட்டுள்ள வாய்க்காலின் உள்கூடு 2 அடி அகலம் இருக்கும் என்றால் சரியல்ல, சாட்சி உள்கூடு இல்லை என்று கூறுகிறார். 2 அடி அகலத்தில் உள்கூடு வாய்க்கால் இருபுறமும் 1 அடி அகலத்தில் வரப்பு அமைக்கப்பட்டு செல்கிறது, நீங்கள் வழக்கிற்காக இல்லை என்று சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

06. குழந்தைவேல் என்பவரிடமிருந்து 1985ம் வருடத்தில் என்னுடைய தகப்பனார், சித்தப்பாக்கள் இருவரும் கிரையம் வாங்கினார்கள். அந்த சொத்தானது எங்களுடைய பூர்வீக சொத்திற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. கிரையம் வாங்கிய ஆவணத்தில் ஏரிவாய்யக்காலை (பச்சை வண்ணமிட்டு வா.சா.ஆ.1ல்) நான்கெல்லை குறிப்பிட்டு தெற்கே என்று கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் தவறு. கிரையாவணத்தில் ஏரிவாய்க்காலுக்கு தெற்கே என்று நான்கெல்லை காண்பித்து தான் கிரையம் வாங்கியுள்ளார்கள் நீங்கள் வழக்கிற்காக இல்லை என்று தவறாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

07. குழந்தைவேலிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தையும், உங்களுடைய தகப்பனார் மற்றும் சித்தப்பாக்கள் பூர்வீக சொததை எப்படி பிரித்து

கொண்டார்களோ அதேபடி அவர்கள் சொத்திற்கு மேற்கேயே கிரையம் சொத்தையும் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட குழந்தைவேலிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தை வாய்மொழியாக தான் பிரித்து கொண்டார்கள், பாகபிரிவினை பத்திரம் எதுவும் போடவில்லை. வா.சா.ஆ.1 ல் k2 R2 V2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது தான் குழந்தைவேலிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். குழந்தைவேலிடமிருந்து கிரையம் பெற்றதற்கு பின்பு தாவா பொதுக்கிணற்றில், உங்கள் தந்தைக்கும், உங்கள் சித்தப்பாக்கள் என மூவருக்கும் தலா 1/3 பங்கு பொதுக்கிணற்றில் உள்ளது என்றால் சரிதான்.

08. பொதுக்கிணற்றிக்கு தெற்கே 5 அடி பாதை இருப்பதாக பாகப்பத்திரத்திலோ, குழந்தைவேலிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணத்திலோ சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். நீங்கள் சொல்வது போல், கிணற்றிக்கு தெற்கே 5 அடி பாதை இருப்பதாக பாகப்பத்திரத்திலோ, கிரையாவணத்திலோ சொல்லவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய சித்தப்பாக ராமசாமி, கடந்த 2008 ம் வருடம், மற்றொரு சித்தப்பாவான வெள்ளையன் வாரிசுதாரர்களிடமிருந்து, வெள்ளையன் பங்கை கிரையம் வாங்கியுள்ள விவரம் எனக்கு தெரியும். ராமசாமி மேற்கண்டவாறு

26.02.2024



கிரையம் வாங்கிய பிறகு உங்கள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள A A1 A2 வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் எடுதது வந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

09. ராமசாமி மேற்கண்டவாறு கிரையம் வாங்கிய பிறகு, தண்ணீர் வாய்க்கால் மூலம் எடுத்து செல்லக்கூடாது என்று உங்கள் தகப்பனார் மீது எரகுடி புறக்காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உங்களை விசாரணைக்கு அழைத்தார் என்றால் சரியல்ல. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள், உங்கள் தகப்பனார் காவல் நிலையத்தில் எப்போதும் போல் வாய்க்காலில் தண்ணீர் எடுத்து செல்லுங்கள் என்று எழுதிக்கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. ராமசாமியிடமிருந்து, 1 ம் பிரதிவாதி தர்மலிங்கம் எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் ஞாபகமில்லை. உங்கள் வயலுக்கு வாய்க்காலிருந்து தண்ணீர் எடுப்பதற்கான மடவாய் குறித்து வா.சா.ஆ.1 வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

10. பொதுக்கிணற்றின் ஆழம் 10 அடி இருக்குமா என்றால் 12 அடி ஆழம் இருக்கும். பொதுக்கிணற்றிக்கு மின் இணைப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட பொதுக்கிணற்றிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் எடுக்க முடியாத

பயன்பாடு இல்லாத கிணறு என்றால் சரியல்ல. நீங்கள் ஏரிவாய்க்கால் மூலமாக மட்டும் தான் விவசாயம் செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய பாட்டனார், தகப்பனார், மற்றும் தற்போது வரை நீங்கள் உங்கள் வரைபடத்தில் காண்பித்துள்ள A A1 A2 வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் எடுத்து செல்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் சித்தப்பா ராமசாமியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது முதல் உங்கள் வரைபடத்தில் உள்ள A A1 A2 வாய்க்கால் வழியாக தான் தண்ணீர் எடுத்து செல்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

11. பாகப்பத்திரம் மற்றும் குழந்தைவேலிடமிருந்து பெற்ற கிரையப்பத்திரம், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்திலோ A A1 A2 என்ற பொதுவாய்க்காலை புழக்க உரிமைக்கு மட்டும் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பாகப்பத்திரம் மற்றும் குழந்தைவேலிடமிருந்து பெற்ற கிரையப்பத்திரம், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்திலோ கிணற்றிக்கு தெற்கே 5அடி பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த ஆவணத்திலும் பொதுக்கிணற்றிற்கு தெற்கே 5அடி பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றும், இல்லாத பாதையை இருப்பதாக வழக்கிற்காக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. குழந்தைவேலிடமிருந்து

கிரையம் பெறுவதற்கு முன்பு உங்களுடை வகையறாக்கல் 5 அடி அகலமுள்ள பலகைக்கல்லில் ஏறி அதற்கு பின்பு வா.சா.ஆ.1 வரைபடத்தில் பச்சைவண்ணமிட்ட ஏரிவாய்யக்கால் வழியாக வந்து A A1 A2 வாய்க்கால் வழியாக வந்து A G வழியாக பொதுக்கிணற்றுக்கு செல்வீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள், மேற்கண்டவாறு சொல்லியுள்ள பாதை வழியாக தான் பொதுக்கிணற்றிக்கு செல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

12. எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் தற்போது சாகுபடி செய்து வருகிறேன். வரைபடத்தில் காட்டியுள்ள பச்சை வண்ணமிட்ட ஏரிவாய்யக்கால் வழியாக வந்து, சிகப்பு வண்ணமிட்ட ஏரிவாய்க்கால் வழியாக தான் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறீர்கள் என்றால் இல்லை. தற்போது இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நேரடியாக தென்வடல் ஏரிவாய்க்காலிருந்து தண்ணீர் எடுத்து சென்றிருந்தால் அது உங்கள் வா.சா.ஆ.1 வரைபடத்தில் தெரிவித்து இருப்பீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பச்சவண்ணமிட்ட ஏரிவாய்க்காலுக்கு வடக்கே மின்மோட்டாருடன் கொண்ட விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான்.

26.02.2024



13. 1ம் பிரதிவாதி ராமசாமியிடமிருந்து கிரையம் பெற்ற பிறகு நீங்கள் ஏரிவாய்க்காலிருந்து தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என்று தகராறு செய்தீர்கள் என்றால் சரியல்ல, பாதை சம்மந்தமாக தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.1 வரைபடத்தில் பச்சை வண்ணமிட்ட ஏரிவாய்க்கால் வழியாக 1ம் பிரதிவாதி தண்ணீர் எடுத்து செல்ல உங்களுக்கு எந்தவித ஆடசேபனை இல்லை என்றால் வாய்க்காலே இல்லை என்று சொல்கிறேன். வா.சா.ஆ.1 வரைபடம் தவறா என்றால் தவறு. 1ம் பிரதிவாதி வகையறாக்கள் ராமசாமியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகும் 1ம் பிரதிவாதி வகையறாக்கள் ராமசாமியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் விவசாயம் செய்து வருகிறர்கள் என்றால் சரிதான், பைப்லைன் மூலமாக விவசாயம் செய்கிறார்கள். நீங்கள் ஏரிவாய்க்காலில் தண்ணீர் எடுத்து செல்லக்கூடாது என்று பிரதிவாதிகளை தடுத்ததால், அவர்களுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு சொத்திலிருந்து பொதுப்பாதை வழியாக பைப்லைன் மூலமாக தண்ணீர் எடுத்து சென்று விவசாயம் செய்கிறார்கள் என்றால் சரிதான்.

14. 07.10.2023ம் தேதி நீங்கள் 1ம் பிரதிவாதி வகையறாக்கள் விவசாயம் செய்தபோது, நீங்கள், சுப்பிரமணி, பாப்பாத்தி ஆகியோர்கள் டிராக்டர் முன்பு சென்று படுத்து, தடுத்தீர்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட சம்பவம் சம்மந்தமாக 3ம் பிரதிவாதி உப்பிலியபுரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மனு ரசீது வழங்கப்பட்டது என்று சொன்னால் மனு ரசீது வழங்கப்பட்டது, தவறாக மனுவின் அடிப்படையில் வழங்கப்பட்டது. உண்மையான நடந்த சம்பவத்திற்காக கொடுக்கப்பட்ட புகார் என்று சொன்னால் சரியல்ல.

15. பிரதிவாதிகள் உங்கள் சித்தப்பாக வகையறாக்களிடமிருந்து கிரையம் வாங்கியதால் வீண் விரோதம் கொண்டு இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒருபோதும் கிரையத்திற்காக உங்கள் சொத்தை கேட்கவில்லை என்றால் சரியல்ல. பொதுக்கிணற்றிக்கு தெற்கே 5அடி பாதை இல்லை என்று இல்லாத பாதையை இருப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய வரைபடத்தை ஏரிவாய்க்கால் அகலத்தை குறிப்பிட்டிருந்தால் உண்மை தன்மை தெரிந்துவிடும் என்பதால் அளவுகளை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

26.02.2024



பொதுக்கிணற்றிக்கு தெற்கே உள்ள பாதையை பிரதிவாதிகள் உழவு செய்து அழித்துவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

16. உங்கள் வரைபடத்தில் A A1 A2 என்ற வாய்க்காலின் தான் உங்கள் பாட்டனார் காலத்திலிருந்தும், பிரதிவாதி வகையறா மூலம் கிரையம் பெற்றது முதல் தண்ணீர் எடுத்து சென்று விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இல்லாத பாதைக்கு நீங்கள் பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.